## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

01.05.2017 தொழிலாளர் புனித சூசைப்பர் திருவிழா - திருப்பலி
03.05.2017 புனித பிலிப்பு, யாக்கோபு - திருத்தூதர்கள் - திருப்பலி
06-05-2017 புனித தோமினிக் சாவியோ விழா - திருப்பலி
07.05.2017 உயிர்ப்பு கால நான்காம் ஞாயிறு - திருப்பலி
14.05.2017 உயிர்ப்பு கால ஐந்தாம் ஞாயிறு - திருப்பலி
21.05.2017 உயிர்ப்புக் காலம் ஆறாம் ஞாயிறு - திருப்பலி
24.05.2017 கிறிஸ்தவர்களின் சகாய அன்னை திருவிழா - திருப்பலி
24.05.2017 சகாய அன்னை திருவிழா நவநாள் - செப வழிபாடு
28.05.2017 இயேசுவின் விண்ணேற்பு பெருவிழா - திருப்பலி
31.05.2017 மரியாள் எலிசபெத்தை சந்தித்தல் திருவிழா - திருப்பலி

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

தோமினிக் சாவியோ - புனிதத்தின் இளமுகம்
புனித மரிய தோமினிக்கா மசரெல்லோ திருவிழா
தொன் போஸ்கோவின் வாழ்வில் கிறிஸ்தவர்களின் சகாய அன்னை
திருச்சபை செய்திகள்

# பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

## 01.05.2017 தொழிலாளர் புனித சூசைப்பர் திருவிழா திருப்பலி

திருமதி. ராணி சம்பந்தன்

### முன்னுரை

"செய்யும் தொழிலே தெய்வம், அந்த திறமைதான் நமது செல்வம், கையும் காலும் தான் உதவி, கொண்ட கடமைதான் நமது பதவி. என்ற அழகான அருமையான பாடலுக்கு முன்மாதிரியானவர் புனித சூசையப்பர். தன்னுடைய கடின உழைப்பால் திருக்குடும்பமான அன்னை மரியாளையும், இயேசுவையும் காத்து வழிநடத்திய உழைப்பின் பெருமையை இயேசுவிற்கு கற்றுத் தந்தவர் இவரே. உழைப்பை பரிசுத்தப்படுத்தவும், கௌரவிக்கவும் பரலோக பாதுகாவலராக புனித சூசையப்பரை நியமித்து 12ம் பத்திநாதர் என்னும் திருத்தந்தை 1955ல் இவ்விழாவை ஏற்படுத்தினார்.

இன்றைய வாசகத்தின் பொருள் "கடவுள் இவ்வுலகை படைத்தார் என்பது" அவ்வகையில் அவரும் ஒரு தொழிலாளியாகவே தோன்றுகின்றார். உழைக்கும் மக்கள் கடவுள் பணியிலே பங்கு கொள்கிறார்கள். இயேசு தொழுகை கூடத்தில் கற்பித்தப்போது அவரின் ஞானத்தைக் கண்டு "இவர் தச்சரின் மகன் அல்லவா" என்றும் அதிசயிக்கிறார்கள். உழைப்பவர் இல்லாமல் இவ்வுலகம் இல்லை நாம் வாழும் சமூகத்தில் உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லாமலும், உயர்ந்த தொழில், தாழ்ந்த தொழில் என்று இனம் பிரிக்கப்பட்டு துன்பப்படும் நிலையை காண்கிறோம். உழைப்பில் உயர்வு, தாழ்வு இல்லை. எல்லாத் தொழில்களும் இன்றியமையாததுதான் என்று கருதப்படும் நிலை வரவேண்டும். ஆகவே இன்றைய தினத்தில் தொழிலாளர்களுக்காகவும், அவர்களின் உழைப்புக்காகவும் சிறப்பாக செபித்து, வாழ்த்து கூறி இத்திருப்பலியில் பங்கேற்போம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

படைப்பின் நாயகனே இறைவா, உம்மால் படைக்கப்பட்ட இவ்வுலக திருச்சபையை காத்துவரும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தத்தம் கடமைகளை நினைவு கூர்ந்து, ஒளிரும் திருச்சபையாக வளர்ந்து உலகெங்கும் உம் ஆட்சி பரிணமிக்க தங்கள் உடலாலும், உள்ளத்தாலும் உழைத்து சிறப்புபெற புனித சூசையப்பர் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

நம்பிக்கையின் நாயகனே இறைவா, உம்மில் நம்பிக்கை கொண்டு உம் வழிநடந்து உம்பணி செய்ய உலகெங்கும் செல்லும் துறவிகள் அனைவரும் கடமையுடன் பணிசெய்ய எந்த ஒரு தடைவராமலும், பிறர் துன்புறுத்தலுக்கு ஆளாகாமலும் உடல் நல குறைவு ஏற்படாமலும் இருக் புனித சூசையப்பர் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

வாழ்வின் இலக்கணமே இறைவா, இக்கால தம்பதிகள் வளர்ந்து வரும் நவநாகரீக மோக வாழ்வில் மூழ்கி திருமணம் என்னும் அருட்சாதனத்தின் சிறப்பு அறியாமல் குடும்பத்தின் மேன்மை உணராமல் உழைப்பின் உண்மை ஏற்காமல் வாழ்வதை உணர்ந்து வருங்கால சந்ததியினரை வளர்க்கும் தன்மையறிந்து, கிறிஸ்தவ வாழ்வின் மேலான குறிக்கோள்களை அடைய புனித சூசையப்பர் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

## 03.05.2017 புனித பிலிப்பு, யாக்கோபு - திருத்தூதர்கள் திருப்பலி

திருமதி. ராணி வில்சன்

### முன்னுரை

நம் புனித தாய் திருஅவை இன்று இவ்விழாவை கொண்டாடும் நோக்கம் தினம் தினம் நாம் வலுவிழந்து போகாமல் புத்துணர்ச்சியோடு செயல்படுவதற்காகவே. திருத்தூதர் பிலிப்பு கலிலேயா

பெத்சாயிதாவில் தோன்றியவர். இறையழைத்தலுக்கு உடனே செவிமடுத்து, தனது நண்பர் நத்தனேயலிடமும் தெரிவித்து திறந்த உள்ளத்தோடு ஐயமின்றி வந்துபாரும் என அழைக்கின்றார். மேலும் கிரேக்கர் எருசலேம் வந்து பிலிப்புவிடம் "ஐயா இயேசுவைக் காண விரும்புகிறோம் என கேட்டபோது அவர் அவர்களை அழைத்துச் செல்கிறார். தூய ஆவியார் வருகைக்குப் பிறகு தமது பணியில் ஈடுபட்டு பிரிஜியாவில் இயராப்போலிசு என்ற நகரில் சிலுவைச் சாவு ஏற்றார் என வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். பல உயர்ந்த பண்புகள் கொண்டவர் இவர்.

திருத்தூதர் யாக்கோபு யூதா ததேயுவின் சகோதரர். ஆண்டவர் இயேசுவின் உறவினர். அல்பேயுவின் மகன். பக்தியில் சிறந்து விளங்கியவர். எருசலேம் நகரின் முதல் ஆயராக விளங்கியவர் (திப. 21:18). யூத மரபுகளை காத்து எருசலேம் ஆலயத்தின் திருப்பணிகளை திறம்பட நடத்தியவர். ஏரோது அக்ரிப்பா இழைத்த அத்தனை கொடுமைகளையும் பொறுமையோடு தாங்கிக் கொண்டவர். புனித பவுல் மனந்திரும்புதலுக்குப் பிறகு அவரது போதனைகளை சந்தேகத்தோடு பார்த்த மக்களுக்கு பவுலைப்பற்றி அறிவிக்க அவரை இருகரம் விரித்து வரவேற்றவர். கடவுளிடம் திரும்புகிறவர்களுக்கு பிற இனத்தாருக்கு தொல்லைக் கொடுக்கக் கூடாது என கூறியவர் (திப.15:20).

இவர் ஒரு திருமுகமும் எழுதியுள்ளார். இவரது திருமகம் பற்றி புனித 23ம் யோவான் திருத்தந்தை தமது தியானக் குறிப்பேட்டில் (நவ 23, 1948ல்) குறிப்பிட்டுள்ளார். இத்திருமுகம் துறவிகளுக்கும், திருப்பணிபுரிவோர்க்கும் பொதுநிலையினருக்கும் மாபெரும் செல்வம். விலைமதிப்பற்ற தங்கச் சுரங்கம். எனவே ஒவ்வொருவரும் இவற்றை இவர்களை மனப்பாடமாக மனதில் பதித்து உண்மையான கிறிஸ்தவ வாழ்வு வாழ மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

தாயும் தந்தையுமான இறைவா, எங்கள் தாய் திருஅவையின் திருப்பணியாளர்கள் அனைவரும் தூய ஆவியின் வல்லமை பெற்று திருத்தூதர்கள் பிலிப்பு, யாக்கோபு போல வாழ்ந்து செயல்பட்டு இறைமக்கள் அனைவரும் நல்ல கிறிஸ்தவ வாழ்வு வாழ அழைத்துச் செல்ல வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

தூயவரான இறைவா, திறந்த மனமும் கள்ளம் கபடமில்லா வாழ்வு வாழவும், அனைத்து மக்களையும் இறைவனிடம் அழைத்து வந்து தூய்மையாக வாழவும், மற்ற அனைத்து இறைவரங்களையும் பெற்றிட உழைக்கும் இருபால் துறவறத்தார் அனைவரையும் ஆசீர்வதித்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

அன்பே உருவான இறைவா, பள்ளிப் படிப்பை நிறைவு செய்து கல்லூரிக்கும், கல்லூரி படிப்பை நிறைவு செய்து வேலை வாய்ப்பு வேண்டி காத்திருக்கும் எம் பிள்ளைகளாகிய மாணவர்களுக்கு ஏற்ற கல்லூரியையும், வேலைவாய்ப்பு அளித்து அவர்களை வழிநடத்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**06.05.2017 புனித தோமினிக் சாவியோ விழா** **திருப்பலி**

திரு. ஜான் அலெக்ஸ்

**முன்னுரை**

தோமினிக் சாவியோ தன் பெற்றோரைப் போலவே இறைப்பற்று மிகுந்தவராக வளர்ந்தவர். நான்கு வயதிலேயே காலை மாலை, உணவுக்கு முன், பின் கூறப்படும் செபங்கள், மூவேளைச் செபம் முதலியவைகளை நன்கு கற்றிருந்தார். நற்கருணை அருட்சாதனத்தைப் பற்றிய அனைத்து மறை உண்மைகளையும் கற்றுத் தெளிவுற்றிருந்தார். எனவே விதிமுறைகளைச் சற்றுத் தளர்த்தி அவருக்கு முதல் இறை உணவு வழங்கிட பங்கு தந்தை தீர்மானித்தார். முதல் நற்கருணை பெற்ற அந்நாளில்,

"நான் அடிக்கடி ஒப்புரவு அருட்சாதனத்தைப் பயன்படுத்தி ஆன்ம குருவின் உத்தரவின்படி நற்கருணை உட்கொள்வேன். ஞாயிறு மற்றும் கடன் திருநாட்கள் கடமைகளைச் சரியாகச் செய்வேன். இயேசுவும் அன்னை மரியாவும் எனது நண்பர்கள் மற்றும் இறக்க நேரிட்டாலும் பாவத்தைச் செய்யமாட்டேன்" என்று சில தீர்மானங்களை எழுதிவைத்துக் கொண்டு தினமும் வாசித்து வந்தார். பள்ளியில் படித்துக் கொண்டிருந்த அந்நாட்களில் படிப்பிலும் சிறந்து விளங்கினார் தோமினிக். 1857 மார்ச் 9ம் நாள் மாலையில் தோமினிக் தமது ஆவியை இறைவனிடம் ஒப்படைத்தார். இத்தாலியில் வாழ்ந்த சார்லஸ் சாவியோ மற்றும் பிரிஜித்தம்மான் தம்பதியினருக்கு 1842 ஏப்ரல் 2ம் நாள் கியேரி நகருக்கு அருகில் ரீவா என்னும் கிராமத்தில் பிறந்த தோமினிக் சாவியோ, 15 வயதிலேயே புனிதத்தன்மையின் உச்சியை அடைந்த தோமினிக் சாவியோவிற்கு திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1950 மார்ச் 5ம் நாள் அருளாளர் பட்டமும் 1954 ஜுன் 12ம் நாள் புனிதர் பட்டமும் வழங்கினார். இங்ஙனம் புனிதரிடம் பிள்ளைகளும் புனிதமடைய உதவுமாறு மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

அன்புத் தந்தையே இறைவா, இளம் புனிதரின் வழியாய் இன்று உம்மை பின்தொடர்ந்துக் கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு உமது வழிகாட்டுதலை சிறப்பாக தந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

சிறுபிள்ளைகளை என்னிடம் விரவிடுங்கள் என்றவரே, எங்கள் பங்கின் சிறு பிள்ளைகளை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். எங்கள் இளம் புனிதரை பின்பற்றி நாங்கள் தீய பழக்கவழக்கங்களை விடுத்து நல்வழியில் நடக்க எங்களுக்குத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியரே எம் இறைவா, புனிதரின் உயர்வுக்கு பெரிதும் உதவியாக இருந்தவர்களைப் போல் எங்களின் பிள்ளைகளுக்கும், ஆசிரியர்களுக்கும் பணிபுரிய நல்வழிகாட்டிய அருட்தந்தையர் கிடைக்கப்பெற உம்மை மன்றாடுகிறோம்.

குணமளிக்கும் மருத்துவரே, எம் இளம் புனிதர் தனது உடல் நலக்குறைவாலும் உமது பிரசன்னத்தை உணர்ந்து உம்மிடம் மன்றாடினார். எங்களின் உடல்நலத்தை நீரே பாதுகாத்து பூரண குணமளித்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**07.05.2017 உயிர்ப்பு கால நான்காம் ஞாயிறு** **திருப்பலி**

திருமதி. பத்மாவதி

**முன்னுரை**

ஆண்டுதோறும் பாஸ்கா காலத்தின் நான்காம் ஞாயிறை நல்லாயன் ஞாயிறு என்றும் தேவ அழைத்தல் நாளாகவும் கொண்டாடுகிறோம். ஆயனின் குரலுக்கு செவிசாய்க்கும் அனைவரும் இயேசுவின் உண்மை சீடர்கள் என்ற கருத்தை இன்றைய நற்செய்தியாளர் யோவான் எடுத்துக் கூறுகிறார். "நல்லாயன் நானே, நல்ல ஆயர் ஆடுகளுக்காக தன் உயிரையும் கொடுப்பார்" இன்றைய முதல் வாசகத்தில் பேதுரு, மனம்மாறி திருமுழுக்குப் பெற்று, தூய ஆவியை கொடையாக பெறுங்கள் இந்த வாக்குறுதியை ஆண்டவராகிய கடவுள் தம்மிடம் அழைக்கும் அனைவருக்கும் உரியது என்கிறார்.

இரண்டாம் வாசகத்தில் கிறிஸ்துவும் உங்களுக்காக துன்புற்று ஒரு முன்மாதிரியை வைத்து சென்றுள்ளார். எனவே நீங்களும் அவருடைய அடிச்சுவடுகளை பின்பற்றுங்கள். ஆயனின் குரலுக்கும் செவிசாய்க்கும் நாமனைவரும் அவரது வார்த்தைகளை கேட்பதற்கு மட்டுமல்லாமல் அதை செயலிலும் வாழ்ந்து காட்டுவோம் என்னும் மனஉறுதியுடன் இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

நல்லாயனாம் எம் இறைவா, உமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் கன்னியர்கள் அனைவரும் நீர் ஏற்படுத்திய திருச்சபையை சிறந்த முறையில் வழிநடத்த அவர்களுக்கு உமது ஆசியை அளிக்கும்படிக்கு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

நல்லாசிரியராகிய இறைவா, இன்றையக் கல்வித்தளங்களில் பணத்தையும் சிபாரிசுகளையும் முதன்மையாகக் கொண்டு, குழந்தைகளின் படிப்பை முன்னேற விடாது தடுக்கும் அனைத்து கல்வித்துறையினர்களும் தவறுகளை உணர்ந்து மனந்திருந்தி நல்ல கல்வியை எல்லா குழந்தைகளுக்கும் கொடுக்கும்படிக்கு வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

மண்முகத்தே மழையை பொழியவரும், வயல் முகத்தே நீரைத் தருபவரும் நீரே இறைவா,(யோபு 5:10) வறண்ட விளைநிலங்களையெல்லாம் பசுமையாக எங்களுக்கு தேவையான மழையை தந்து வெயிலின் தாக்கத்திலிருந்து எங்களைக் காத்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 14.05.2017 உயிர்ப்பு கால ஐந்தாம் ஞாயிறு — திருப்பலி

திரு. D.V.R. ராஜா

### முன்னுரை

உயிர்த்த கிறிஸ்து தமது வாழ்க்கையின் மாதிரிகளாலும் போதனைகளாலும் அவரை அடித்து, அவமானப்படுத்தி உயிரையே பரித்தும்கூட பிதாவின் சித்தத்திற்கு அடிபிறழாமல் நமக்காக தன்னையே கொடுமைகளுக்குட்படுத்திக்கொண்டார். இந்த ஆழ்விசுவாசம் நம் ஒவ்வொருவருக்கும் இருத்தல் வேண்டும்.

உயிர்த்த இயேசு நம் ஒவ்வொருவரும் உயிருள்ள கற்களாகவும், ஆவிக்கேற்ற மானிடராகவும் விளங்க வேண்டும் என்கிறார். இதற்காகவே நம்மை அந்த காரிருளிலினின்று ஆச்சரியமான ஒளிக்குக் கொணர்ந்தார். அவரை விசுவசிக்கும் ஒவ்வொருவருக்கும் உயர்ந்த கட்டிடம் எழுப்பும் மூலைக்கல்லாகவும் விசுவசியாதோர்க்கு அக்கல்லே வாழ்வில் இடறிவிடும் இடர்கல்லாகவும் அமைந்துவிடும்.

உயிர்த்த இயேசு தம் தந்தையின் இடத்தில் நமக்கு ஏற்பாடு ஓர் இடம் செய்து நம்மை அழைக்க வருவார். அவரே வாழ்வும் வழியும் உயிருமாய் உள்ளார். அவராலேயன்றி எவரும் தந்தையிடம் செல்ல முடியாது. இக்கருத்துக்களே இன்றைய திருப்பலியின் இருவாசகமும், நற்செய்தியின் மைய மூலக் கருத்தும் பொருளுமாய் அமையப் பெற்றுள்ளது.

எனவே உயிர்த்தக் கிறிஸ்துவின் போதனைகளை மனதில் இருத்தி, நடத்தைகளிலும், செயல்களிலும், வாழ்விலும் அவற்றை பிரதிபலித்து உண்மையுள்ள கிறிஸ்தவன், கிறிஸ்தவள் என்பதை எண்பித்து அவருக்கு சாட்சியுள்ள வாழ்வு வாழ இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம்.

### விசுவாசிகளின் மன்றாட்டு

**திருச்சபைக்காக:** அன்பின் ஆண்டவரே, எமது திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தையை இறைவன்தாமே பாதுகாத்து திருச்சபையை தொடர்ந்து நன்முறையில் வழிநடத்தவும் மக்களின் விசுவாச வாழ்வுக்கு வழிகாட்டியாகவும் கர்தினால், ஆயர், குருக்களை நல்முறையில் அரவணைத்து செல்லும் ஆசானாக விளங்கி திருச்சபை பொலிவு பெறவும் உலக நாடுகளில் அவரின் குரலுக்கு செவிமடுத்து போர் பதட்டமின்றி மக்கள் வாழ அவர் சமாதானக் கருவியாய் விளங்கவும், உடல்நலத்தோடு நெடுங்காலம் வாழ்ந்து இறைவனுக்கு சேவைப் புரிந்திட தேவையான அருள் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**பங்கு மக்களுக்காக:** உயிரின் ஊற்றாகிய இறைவா, எம் பங்கு மக்கள் அன்பு, அமைதி, விசுவாசம் இவற்றைக் கேடயமாய் கொண்டு இறை மதிப்பீடுகளின்படி வாழவும், சாட்சிகளாய் விளங்கவும், இறை

வார்த்தையில் வேரூன்றி நிற்கவும், சமாதான வாழ்வு அமையப் பெறவும், தங்களின் பிள்ளைகளை ஒழுக்கத்திலும், விசுவாசத்திலும் வளர்க்கவும், கடன் பிரச்சனை, கஷ்டங்கள், நோய், சாபம், பொருளாதாரப் பற்றாக்குறை நீங்கி தன்நிறைவு பெற்ற குடும்பங்களாக விளங்க அருள் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**இளையோருக்காக:** இருபால் இளையோர் கிறிஸ்துவின் போதனைகளை உள்வாங்கி அவற்றை பிரதிபலிக்கும் கண்ணாடிகளாய் விளங்கி குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் தங்களுக்கும் நற்சான்று பகரும் வாழ்க்கை முறையைக் கைக்கொண்டு அறிவியல் வளர்ச்சியை நன்முறையில் பயன்படுத்திக் கொள்ளவும் இறைவன் இவர்களுக்கு நல்ல வேலை வாய்ப்பை நல்கி ஏற்ற துணையையும் நல்கிட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**ஆட்சியாளர்களுக்காக:** நீதியின் இறைவா எம் நாட்டையும் மாநிலத்தையும் ஆளும் தலைவர்கள், பணத்தையும் புகழையும் மட்டுமே தங்கள் இலட்சியம் குறிக்கோளாகக் கொண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்கள் மக்களுக்கே விரோதமான திட்டங்களை அதிகாரத்தால் திணிக்கின்றனர். மேலும், கொலை, கொள்ளை, களவு, வன்முறை, பாலியல் வன்கொடுமை, சிறார் பாலியல் கொடுமை, விலை உயர்வு, வேலையின்மை, லஞ்சம் போன்ற காரியங்கள் பெறுகி மனிதர் வாழ முரணான இச்சூழ்நிலைகளை மாற்றி இறைவன் தாமே நல்ல நிர்வாகத் திறனும், மனசாட்சியும் நேர்மையுள்ள ஆட்சியாளர்கள் அமையப்பெற உதவி செய்து மக்கள் அனைவரும் அமைதியும், நிம்மதியும் பெற்று வாழும் சூழலை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 21.05.2017 உயிர்ப்புக் காலம் ஆறாம் ஞாயிறு திருப்பலி

திரு. சாண்டோ

### முன்னுரை

இறையேசுவில் பிரியமுள்ள இறைக்குலமே நாம்இன்று உயிர்ப்புக் கால ஆறாம் ஞாயிறை சிறப்பித்துக் கொண்டிருக்கும் நம் திருச்சபையானது தூய ஆவி என்னும் ஒரு துணையாளரை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நமக்கு அளிப்பதாக தான் உயிருடன் இருந்த நாட்களில் தம் திருத்தூதர்களுக்கு உறுதியளித்திருந்தார் அந்த தூணையாளருக்காக நாம் காத்திருக்கின்றோம் என்ற சிந்தனையில் இன்றைய வாசகங்களை நமக்கு தந்திருக்கின்றது. ஆம் இன்றைய மூன்று வாசகங்களிலும் தூய ஆவியின் தேற்றரவு நமக்கு எத்துணை அவசியமகின்றது என்றும் தூய ஆவியின் வழித்துணை நமது புதுவாழ்வுக்கு உதவும் பெரும் சக்தி என்றும் தெரிந்து கொள்வோம். மூன்றாம் ஆளாகிய தூய ஆவியானவரின் துணைக்காக ஒரே குடும்பமாக இத்திருப்பலியில் ஒருமனத்தோராய் மன்றாடுவோம்

### விசுவாசிகளின் மன்றாட்டு

வழிநடத்தும் ஆண்டவரே எம் இறைவா, எம் திருச்சபையை உமது உயிர்ப்புப் பாதையில் வழிநடத்திவரும் உலக நாடுகளில் அன்பை விதைத்து வரும் எம் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவரையும் உமது தூய ஆவியின் தூண்டுதலை பெற்று அதன் படி எங்களை வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

குணமளிக்கும் இறைவா, எங்கள் பங்கின் உடல் நோயினால் வருந்துவோரையும் மனநோயினால் துன்பப்படுவோரையும் உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம் உமது தேற்றரவாளரான தூய ஆவியின் தூண்டுதலால் நோய் நீங்கப் பெற்று உமக்கு சாட்சியாக வாழ வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

தேற்றரவாளரே எம் இறைவா, உணவின்றியும், வறுமையினாலும், கடன்தொல்லையாலும், வருந்தும் மக்களை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம் உமது ஆதரவும் அனபும் அவர்களுக்கு அதிகமாக

பொழியப்பட்டு அவர்கள் எடுக்கின்ற நல்ல முயற்சிகளிலெல்லாம் நல்ல வருமானத்தை பெற்று மகிழ வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.

வரங்களைப் பொழியும் எம் இறைவா, தேர்வு எழுதியுள்ள மாணவ மாணவிகளை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம் உமது வரத்தினால் அவர்கள் எழுதியுள்ள தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று அவர்களின் வாழ்வு சிறக்க செய்யுமாறு உம்மை மன்றாடுகின்றோம்.

**24.05.2017 கிறிஸ்தவர்களின் சகாய அன்னை திருவிழா திருப்பலி**

**திரு. ஜீசஸ் மகுடமன்னன்**

**முன்னுரை**

1572ம் ஆண்டு கிறிஸ்தவர்களை வெற்றி கொள்வதற்காக இஸ்லாமிய துருக்கியர்படை போர் முரசு கொட்டியது. அன்றைய திருத்தந்தையான 5ம் பத்திநாதர், கிறிஸ்துவ வீரர்கள் அனைவரும் விசுவாசத்துடன் செபிக்கும்படி கேட்டுக்கொண்டார். லெபாண்டோ எனும் இடத்தில் கிறிஸ்தவர்களை எதிர்த்த துருக்கியர் படை படுதோல்வியடைந்தது. மரியா கிறிஸ்தவர்களின் சகாயம் என நாடு முழுவதும் போற்றிப் புகழப்பட்டார்.

வரலாற்றுப் பக்கங்களில் மாவீரன் நெப்போலியன் என்று குறிக்கப்பட்டவன் தாம் பின்பற்றும் கிறிஸ்துவ மதத்திற்கே துரோகம் செய்தான். அவன் செய்த மிகப்பெரிய தவறு 1808ம் ஆண்டு கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவர் 7ம் பத்திநாதரை சிறையிலடைத்தான். ஆயினும் நெப்போலியனின் ஆணவ அகங்காரம் லெய்ப்ஸிங்க் என்னுமிடத்தில் நடந்த போரில் படுதோல்வியடையச் செய்தது. அதன் விளைவாக திருத்தந்தை 7ம் பத்திநாதர் சிறை வாழ்க்கையிலிருந்து விடுதலைப் பெற்றார். கத்தோலிக்க மக்கள் அன்னை மரியாமீது பக்தி கொண்டு செபித்ததின் விளைவே திருத்தந்தையின் விடுதலையாகும். இவ்விடுதலை ஆண்டினை நினைவு கூறவே திருத்தந்தை "கிறிஸ்தவர்களின் சகாயமாதா" எனும் பெயரில் விழாவினை ஏற்படுத்தினார்.

கேட்டதை கேட்டபடி தரும் சகாயமாதா திருவிழாவினை இன்று கொண்டாடும் நாமும் அன்னையின் மக்களாக விசுவாச வாழ்க்கை வாழ்வோம் என வாக்களித்து பக்தியுடன் இன்றைய திருவிழாத் திருப்பலியில் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

விண்ணகத் தந்தையே இறைவா, மெல்கி சதேக்கின் முறைப்படி என்றென்றும் குருவாயிருக்கும் எங்கள் ஆண்டவராகிய இயேசுவின் வழித் தோன்றல்களாகிய திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், வேதியர், பொதுநிலையினர் அனைவரும் உமது இறையரசை கட்டியெழுப்பும் தூய பணியில் விசுவாசம், எதிர்நோக்கு, அன்பு, நடுநிலைமை, தியாகம், மன்னிப்புப் போன்ற மேலான பண்புகளை வாழ்வாக்கி அர்ப்பணம், கற்பு, ஏழ்மை இவைகளைக் கட்டிக்காத்து, இறையரசின் காட்சிகளாக வாழ்வதற்கு தேவையான வரங்களை அளித்தருளுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

நலம் காத்து வலம் பொழியும் இறைவா, சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்ட இளம் உள்ளங்களைத் தேடி அவர்களை வழி நடத்துவதிலும் ஒருங்கிணைப்பதிலும், ஆற்றுப்படுத்துவதிலும், அக்கறை கொண்டு அருள்பணியாற்றும் தொன் போஸ்கோவின் சலேசியர்கள், எளிமை, எண்ணத் தூய்மை, மனவலிமை ஏற்றுக்கொண்ட பணியிலும் பணிவு எனும் கீழ்படிதல் எனப் பலமுனைகளிலும் காட்சியாக நின்று வழி நடத்திக் கொண்டிருக்கும் அவர்களை, உமது அளவில்லா வரங்களை பொழிந்து காத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

எளிய மனத்தோர் பேறுபெற்றோர் எனும் இலக்கணம் வகுத்த இறைவா, மலைப்பொழிவில் உலக நலன்கள் வரையறுத்து வாழ்வளித்த வள்ளலாகிய அன்பு தெய்வமே எங்களோடு வாழ்வோரில்

வாழ்விழந்து ஒடுக்கப்பட்டு, நசுக்கப்பட்டு, உரிமையற்று, நோய் நொடியில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களை நலம் பெற்று வாழ்வதற்கான வரம் தந்து நிறை வாழ்வளிக்கும்படி, உம்மை மன்றாடுகின்றோம்.

**24.05.2017 சகாய அன்னை திருவிழா நவநாள் செப வழிபாடு**

அருட்பணி. அந்தோணி கிறிஸ்டி சச.,

(நவநாள் செபவழிபாடு மாதிரி அமைப்பு முறை)

1. தந்தை, மகன், தூய ஆவியின் பெயராலே...
2. மரியாள் பாடல்
3. விசுவாச பிரமாணம்
4. செபமாலை
5. மரியாள் பாடல்
6. நாளுக்குரிய இறைவார்த்தை
7. நாளுக்குரிய கருத்துக்காக செபம்
8. குடும்பங்களை சகாய அன்னைக்கு அர்ப்பணிக்கும் செபம்
9. கிறிஸ்தவர்களின் சகாய அன்னை நவநாள் செபம்
10. சகாய அன்னையின் ஆசீர்
11. மரியாள் பாடல்

**குடும்பங்களை சகாய அன்னைக்கு அர்ப்பணிக்கும் செபம்**

மிகவும் பரிசுத்த கன்னிகையே, உம்மை நம்பினவர்க்கு உதவி செய்ய நீர் கடவுளால் ஏற்படுத்தப்பட்டீர். நாங்கள் உம்மை எங்கள் தாயாகவும், எங்கள் குடும்பங்களின் பாதுகாவலியாகவும் தெரிந்துக் கொண்டோம். எங்கள் குடும்பங்களை எல்லாவித துன்பங்களிலிருந்தும், நெருப்பு, சண்டைச் சச்சரவு, இடி, மின்னல், காற்று, பூகம்பம், கொள்ளைக் கூட்டத்தினர் இவர்களிடமிருந்தும் காப்பாற்றும். இந்தக் குடும்பத்திலுள்ள அனைவரையும் விபத்துக்களிலிருந்தும், வியாதிகளிலிருந்தும், துன்பங்களிலிருந்தும் காப்பாற்றி, உமது திருக்கரங்களால் ஆசீர்வதியும். எங்களை உமது உடமையாக்கியருளும். எல்லாவற்றிற்கும் மேலாக பாவத்திலிருந்து காப்பாற்றும். சகாயத்தாயே இந்தக் குடும்பத்தை உமக்கு கையளிக்கிறோம். எங்களுக்காக உமது திருக்குமாரனிடம் மன்றாடும். ஆமென்.

**கிறிஸ்தவர்களின் சகாய அன்னை நவநாள் செபம்**

மு: நற்கருணை நாதருக்குச் செபம்

அ: இனிமையும் அன்பும் நிறைந்த இயேசுவே, மனுமக்கள் மத்தியில் வாழ்வதே எனது மகிழ்ச்சி என்றுரைத்து, உம்மையே என் ஆன்ம உணவாகக் கையளித்தீர். இறைமக்கள் மத்தியிலும், குறிப்பாக இளைஞர் மத்தியிலும் இத்திருவருட்சாதனம் வழியாய் உம்மை அடிக்கடி உட்கொள்ளும் பக்தியை, இப்பூவுலகில் பரப்பிய உம் அடியாராகிய புனித ஜான் போஸ்கோவின் பேறு பலன்களை முன்னிட்டு, நான் தாழ்மையுடன் விண்ணப்பிக்கும் மன்றாட்டுக்களுக்கு தயவாய் செவிசாய்த்தருளும்.

பரலோகத்திலிருக்கிற... அருள் நிறைந்த மரியே...

தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும்...

நித்திய ஸ்துதிக்குரிய பரிசுத்த பரம திவ்விய நற்கருணைக்கு, எந்நேரமும் ஆராதனையும் துதியும் ஸ்தோத்திரமும் நமஸ்காரமும் உண்டாகக்கடவது.

மு: சகாய அன்னையை நோக்கி செபம்

அ: கன்னித்தாயே கிறிஸ்தவர்களின் சகாயமே, உமது அடியாராகிய புனித ஜான்போஸ்கோவின் வழியாக எண்ணற்ற புதுமைகளைப் புரிந்து வருகின்றீர். பாசமுள்ள அன்னையே, பாவியாகிய நான் இரந்து கேட்கும் மன்றாட்டுக்களை புனித ஜான் போஸ்கோவின் பேறு பலன்களை முன்னிட்டு உமது திருமகனிடமிருந்து பெற்றுத் தந்தருளும்படி கெஞ்சி மன்றாடுகிறேன்.

கிருபை தயாபத்துக்கு மாதாவாயிருக்கிற

கிறிஸ்தவர்களின் சகாய அன்னையே

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

மு: புனித ஜான் போஸ்கோவை நோக்கி செபம்

அ: மகிமை நிறைந்தவரான புனித ஜான் போஸ்கோவே, நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவிடமும், சகாய அன்னையிடமும் எனக்காகப் பரிந்து பேசும். திவ்ய நற்கருணையில் வீற்றிருக்கும் இயேசுவை என்றென்றும் நேசிக்கும் வரத்தையும், சகாய அன்னையின்மேல் வற்றாத அன்பையும் எனக்குப் பெற்றுத் தந்தருளும். ஆமென்.

மு: புனித ஜான் போஸ்கோவே

அ: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

**சகாய அன்னையின் ஆசீர்**

குரு: ஆண்டவர் பெயரால் நமக்கு உதவியுண்டு

எல்: அவரே பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்தவர்

குரு: அருள் நிறைந்த மரியே...

எல்: கர்த்தர் உம்முடனே...

குரு: இறைவனுடைய தூய மாதாவே...

எல்: இதோ உமது அடைக்கலமாக ஓடி வந்தோம். எங்கள் அவசரங்களில் நாங்கள் மன்றாடும் வேண்டுதல்களைத் தள்ளாதேயும். மாண்புமிக்க கன்னிகையே, ஆசீர்பெற்றவரே, சகல ஆபத்துக்களிலிருந்து எங்களை எப்போதும் விடுவித்துக் காப்பாற்றியருளும்.

குரு: அனைத்து மக்களின் சகாயமான தூய மரியே

எல்: எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்

குரு: ஆண்டவரே எம் மன்றாட்டைக் கேட்டருளும்

எல்: எம் கூக்குரல் உம்மிடம் வருவதாக

குரு: ஆண்டவர் உங்களோடு இருப்பாராக

எல்: உம்மோடும் இருப்பாராக

குரு: செபிப்போமாக

எல்லாம் வல்ல நித்திய இறைவா, மாண்புமிக்க கன்னித்தாயான மரியாளின் ஆன்மாவையும், உடலையும் தூய ஆவியானவரின் துணையால் உம்முடைய திருக்குமாரனுக்குத் தகுதியான இருப்பிடமாக இருக்கச் செய்தீரே. அவளுடைய புகழைக் கொண்டாடி மகிழ்கின்ற எங்களை அவளுடைய மன்றாட்டினால் எங்களுக்கு நேரிடுகிற துன்பங்களிலிருந்து நித்திய மரணத்திலிருந்தும் விடுவித்தருளும். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

எல்: ஆமென்.

குரு: எல்லாம் வல்ல இறைவன் தந்தை, மகன், தூய ஆவி உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

எல்: ஆமென்.

## நாளுக்குரிய செபங்கள்

**மே 16: இறையழைத்தல் அதிகரிக்க...**

**நாளுக்குரிய இறைவார்த்தை: லூக்கா 1: 26-38**

**செபம்**

"இதோ உமது அடிமை, உமது வார்த்தையின்படி ஆகட்டும்" என்று இறைசித்தத்தை முழுமனதுடன் ஏற்று இம்மண்ணுலகம் மீட்படைய வழிவகுத்து எம் அனைவருக்கும் சகாயம் செய்த எம் அன்னையே, உம் மகனும் எம் மீட்பருமான இயேசு கிறிஸ்து விட்டுச்சென்ற மீட்புப்பணி அனைத்து மக்களையும் சென்றடைய இன்னும் ஊழியர்கள் தேவைப்படுகின்றனர். உமது பிள்ளைகளாகிய எங்களில் பலர் உள்ளங்களில் இறையழைத்தலுக்கு செவிசாய்க்கக் கூடிய நல்ல மனதினை கொடுத்து, உமது எடுத்துக்காட்டான வாழ்வை பின்பற்றி அவ்வழைத்தலில் சோர்வின்றி நிலைத்து நிற்க வரம் வேண்டி இன்று உம் வழியாக வானக தந்தையிடம் வேண்டுகிறோம். ஆமென்.

**மே 17: சகோதரத்துவமும் அமைதியும் தழைத்தோங்கிட...**

**நாளுக்குரிய இறைவார்த்தை: லூக்கா 1: 39-45**

**செபம்**

"என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?" என எலிசபெத்தம்மாள் உம் உதவிக்கரத்தையும், அக்கறையையும் மெச்சி கூறும் தருவாயில், சகாய அன்னையே, உமது உதவும் மனப்பான்மையும், தியாக உள்ளமும் தெள்ளத்தெளிவாக விளங்குகின்றது. நீர்தாமே உம் பிள்ளைகளாகிய எங்கள் உள்ளங்களிலும் தேவையில் உள்ள எங்கள் சகோதர சகோதரிகளிடம் விரைந்து சென்று எம் உதவி கரத்தை மனமகிழ்வோடும், எதையும் திரும்ப எதிர்பார்க்காமல் நீட்டிடவும் அதன் வழியாக சகோதரத்துவமும் சமத்துவமும் உதவிடவும் நல்ல சமுதாயத்தை உருவாக்கிட வேண்டுமென்று உம் வழியாக இறைவத்தந்தையிடம் வேண்டுகிறோம். ஆமென்.

**மே 18: ஏழைகள் எளியவர்களுக்காக...**

**நாளுக்குரிய இறைவார்த்தை: லூக்கா 1: 47-56**

**செபம்**

தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார்" செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார் என இறைவனின் மகத்துவத்தையும் நீதிநெறியையும் புகழ்ந்து பாடிய எம் சகாய அன்னையே, எம்மிடையே வாழும் ஏழை எளியவர்களுக்காய் சிறப்பாக மன்றாடுகிறோம். அவர்கள் உள்ளத்தில் இறைவன் தங்களை அன்பு செய்து பராமரிக்கின்றார் என்ற நம்பிக்கை வளரவும் இறைவனது கரத்தை இவர்களை சுற்றியுள்ள மற்றவர்களின் பகிரும் குணத்தில் உணர்ந்திட வரம் வேண்டி இன்று உம் வழியாக இறைத்தந்தையிடம் வேண்டுகிறோம். ஆமென்.

**மே 19: அனாதை குழந்தைகளின் எண்ணிக்கை குறைய**

**நாளுக்குரிய இறைவார்த்தை: லூக்கா 2: 3-12, 15-19**

**செபம்**

விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே பிள்ளையை துணிகளில் பொதிந்து தீவணத்தொட்டியில் கிடத்தினார். சகாய அன்னையே வசதியில்லாத சமத்திலும், நெருக்கடியான சூழலிலும் ஆதரவற்ற நிலையிலும் இயேசுவை உம் வயிற்றில் தாங்கியதை சற்றும் சுமையாக எண்ணாமல் சுகமான இன்னல்களாக நீர் சந்தித்து அவரை இவ்வுலகிற்கு அளித்தீர். இன்று பலவகையான காரணங்களால் பல குழந்தைகள் இம்மண்ணில் காலடி வைக்கும் முன்பே கருவிலே சிதைக்கப்படுகின்றன. இச்செயலை அறிந்தும் அறியாமலும் பலர் செய்து வருகின்றனர். மேலும் பெற்ற பிள்ளைகளை அனாதைகளாக தெருவோரங்களிலும் குப்பைத்தொட்டிகளிலும் பல்வேறு இடங்களிலும் விட்டுச்செல்லும் அவல நிலையும் இன்று அதிகரித்துவிட்டன. இவ்வாறு செய்யும் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் நீர்தாமே மனமாற்றத்தைத் தந்து உள்ள அமைதியையும், நிம்மதியையும் தரவேண்டி இன்று உம் வழியாக வானகத் தந்தையிடம் மன்றாடுகிறோம். ஆமென்.

**மே 20: உறவு முறிவுகளால் பிரிந்துகிடக்கும் குடும்பங்களுக்காக...**

**நாளுக்குரிய இறைவார்த்தை: யோவா 2: 1-11**

**செபம்**

இயேசுவின் தாயும் அங்கு இருந்தார். இயேசுவும் அவருடைய சீடரும் அத்திருமணத்திற்கு அழைப்பு பெற்றிருந்தார்கள். கேட்பதற்கு முன்பே தேவையை அறிந்து உதவிகளை வழங்கும் எம் சகாய தாயே, கானாவூர் திருமணத்தில் திராட்சை இரசம் பற்றாக்குறையினால் திருமண தம்பதியினரின் குடும்பங்களிடையே உறவு நெரிசல்களைப் புரிந்துக்கொண்டு நேர்த்தியான முறையில் எவ்வித அசம்பாவிதமும் நிகழாமல் உமது பரிந்துரையால் பெறும் அடையாளத்தை காணச்செய்தவர் நீர். இன்று. பல கிறிஸ்தவ குடும்பங்கள் அடித்தளமற்ற சிறுசிறு கருத்து வேறுபாடுகளால் சிதறிக்கிடக்கின்றன. கணவன் மனைவியிடையேயான முறிவுபட இயலா உறவு, விவாகரத்தை நோக்கி நீதிமன்றங்களில் நின்று கொண்டிருக்கின்றன. இக்குடும்பங்களை உமது பாதத்தில் ஒப்புக்கொடுக்கின்றோம். இவர்களின் உறவை புதுப்பித்து புனிதமாக்கிட வழிவகை செய்ய வேண்டுமென இன்று உம் வழியாக பரம தந்தையிடம் மன்றாடுகிறோம். ஆமென்.

**மே 21: நோய்நொடியில் வாடுவோர்க்காகவும் மரண தருவாயில் இருப்பவர்களுக்காகவும்...**

**நாளுக்குரிய இறைவார்த்தை: யோவா 19: 25-27**

**செபம்**

"இவரே உம் தாய்" இயேசு இறைவனின் திட்டத்தை நிறைவேற்றி இவ்வுலக, வாழ்வின் பயணத்தை நிறைவு செய்யும் வண்ணம் பாடுகள்பட்டு பல்வேறு வேதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு தம் கடைசி மூச்சுவிடும்வரை அவரோடு இறுதிவரை நிலைத்திருந்து, அவரது பாடுகளில் முழு பங்கெடுத்த எம் சகாய அன்னையே, இன்று பல்வேறு விதமான உடல்நோய், மனநோயால் அவதிப்படுபவர்களையும் மரண படுக்கையில் ஆதரவின்றி தவிக்கும் பலரையும் நினைவு கூறுகிறோம். இயேசு தன் அன்பு சீடரிடம் கூறிய "இவரே உம் தாய்" என்ற வாக்கு இவர்கள் காதுகளில் ஒளிர்வதாக. உம்முடைய பாசகரத்திலே இவர்கள் தங்கள் பிணிகளையும் வலியையும் இறைவனுக்காக ஒப்புவித்து உடல் உள்ள நலமடைய வரம் கேட்டு உம் வழியாக வானக தந்தையிடம் மன்றாகிறோம். ஆமென்.

**மே 22: குருக்கள் மற்றும் துறவியர்களுக்காக...**

**நாளுக்குரிய இறைவார்த்தை: மாற்கு 3: 31-35**

**செபம்**

"கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே என் சகோதரரும், சகோதரியும், தாயும் ஆவார். அன்பு நிறை அன்னையே, இறைமகன் இயேசு உம்மிடத்தில் அதிகம் நேசிக்கும் பண்பான இறைச்சித்தத்திற்கு கட்டுப்பட்டு நடப்பதை மையப்படுத்தி அனைவருக்குமே உம்மை முன்மாதிரியாக சுட்டிக்காட்டுகின்றார்.

இன்று நாங்கள், ஆன்ம வாழ்வில் முதிர்ச்சி நிலையை அடையச் செய்யவும் உமது அரசை இவ்வுலகில் கட்டியெழுப்பவும் உமது அழைப்பிற்கு இணங்கி தங்களை அர்ப்பணம் செய்துள்ள குருக்கள், துறவியர், கன்னியர் மற்றும் பொதுநிலையினரை பாசத்துடன் நினைவு கூறுகின்றோம். அவர்கள் தாங்கள் எதிர்கொள்ளும் அனைத்து சோதனைகளையும் உம் உதவியுடன் முறியடித்து தங்கள் அழைத்தலில் நிலைத்திருந்து இறைவனின் திருவுளத்தை என்றும் நிறைவேற்றி உம் மகனின் சகோதரர், சகோதரி என திகழ உம்வழியாக வானக தந்தையிடம் மன்றாடுகின்றோம். ஆமென்.

**மே 23: அநீத முறையில் சந்தேகத்திற்கும் தண்டனைக்கும் ஆளாக்கப்படுபவர்களுக்காக...**

**நாளுக்குரிய இறைவார்த்தை: மத்தேயு 1: 18-21, 24**

**செபம்**

"அவர் மரியாவை இகழ்ச்சிக்குள்ளாக்க விரும்பாமல் மறைவாக விலக்கிவிட திட்டமிட்டார்" சகாய அன்னையே அன்று நீர் யூத சமுதாயத்தின் மத்தியில் தைரியமாக இறைவன்மீது நம்பிக்கை வைத்து திருமணத்திற்கு முன் கருதரித்தீர். இறைவன் உம்மை சூசையப்பர் வழியாக எவ்வித பழிக்கும் தண்டனைக்கும் ஆளாக்காமல் காத்தார். இன்றைய சமுதாயத்தில் பல கிறிஸ்தவ குடும்பங்களில் சந்சேதகத்தின் பேரில் பலர் ஒருவர்மீது ஒருவர் குறைக் கூறி, பழிசுமத்தி, நேர்மையற்ற முறையில் தீர்வைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். தண்டனைக்கு உட்படுத்தினர். உம்முடைய அருளுதவியாலும் சூசையப்பரின் முன்மாதிரிகையாலும் மற்றவர்மீது சுமத்தப்படும் கலங்கத்தை நீக்குபவர்களாகவும் பழியை ஒழிப்பவர்களாகவும் இவ்வாறு இறையாக்கப்படுபவர்களுக்கு ஆறுதலாகவும் அவர்களை ஏற்றுக்கொள்பவர்களாகவும் நாங்கள் திகழ்ந்திட உம் வழியாக இன்று நாங்கள் தந்தையாம் இறைவனிடம் வேண்டுகின்றோம். ஆமென்.

**மே 24: விசுவாச தளர்ச்சியாலும், பிறசபையினரின் ஈர்ப்பு சக்தியாலும் அலைகழிக்கப்படும் கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்காக**

**நாளுக்குரிய இறைவார்த்தை: திருத்தூதர் பணி 1: 13-14**

**செபம்**

அவருடைய தாய் மரியாவோடு இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள். இயேசுவின் மரணத்தை கண்ட சீடர்கள் பயத்தில் தங்கள் விசுவாசம் துவண்ட நிலையில் அஞ்சி கிடக்கும் தருவாயில் அசைக்க முடியாத நம்பிக்கையோடு இயேசுவின் உயிர்ப்பை எதிர்நோக்கிய எம் சகாய அன்னையே, கிறிஸ்தவர்களாகிய நாங்கள் பலவேளைகளிலே எங்கள் விசுவாசத்தில் தடுமாறு தடுமாறுகிறோம். தவறான போதனைகளால் வசீகரிக்கப்படும் எங்களில் பலர் தாய் திருச்சபையின் பாரம்பரியத்தையும் படிப்பினைகளையும் எளிதில் மறந்து விடுகின்றனர். நாங்கள் அனைவரும் உம்மோடு இணைந்து ஒரே மனதாய் அப்போஸ்தலர்கள் வழியாய் கட்டப்பட்ட திருச்சபையை ஆழ்ந்த விசுவாசத்தில் நிலைக்கச் செய்ய நம் இறைவனாகிய தந்தையிடம் வேண்டுகின்றோம். ஆமென்.

**28.05.2017 இயேசுவின் விண்ணேற்பு பெருவிழா திருப்பலி**

திரு. ஜான் சுரேஷ்

**முன்னுரை**

அன்பார்ந்த சகோதர சகோதரிகளே இன்று நம் தாய் திருச்சபையானது நம்மை இயேசுவின் விண்ணேற்பு பெருவிழாவை கொண்டாட அழைப்பு விடுக்கின்றது இயேசு உயிர்த்தெழுந்த பின் நாற்பது நாட்கள் தம் சீடர்களை திடப்படுத்தி வந்தார் இன்றைய வாசகங்கள் அனைத்தும் ஆண்டவரின் உயிர்ப்பு மற்றும் விண்ணேற்றத்தினை பற்றியே நம்மை சிந்திக்க அழைக்கிறது. இயேசு உயிர்தெழுந்த பின் தம்

சீடர்களிடம் உலகெங்கும் சென்று படைப்புக்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள், உங்களுக்கு துணையாக தூய ஆவியை அனுப்புவேன் அவர் உங்களை நிறை உண்மையை நோக்கி வழிநடத்துவார் என்பதே விண்ணேற்றமடைந்த நம் ஆண்டவர் நம்மை வழிநடத்த, நற்செய்தியை பறைசாற்ற திருத்தூதர்களை போன்று தூய ஆவியால் அபிஷேகம் செய்யப்பட்ட ஆயர்களையும் குருக்களையும் துறவறத்தாரையும் நம்மிடையே அனுப்புகிறார். விண்ணகம் சென்ற கிறிஸ்து மீண்டும் மண்ணகம் வருவார் என்னும் நம் நம்பிக்கையை உறுதிப்படுத்தி வாழ இத்திருப்பலியில் பங்குபெறுவோம் இறையருள் பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

அன்பான இறைவா உம் திருவுளப்படி எம் திருச்சபையை வழிநடத்திச் செல்லும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், திருப்பணியாளர்கள் அனைவரையும் நீரே உம் அன்புக்கரத்தால் ஆசீர்வதித்து வழிநடத்திச் செல்லவேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

இறையரசின் ஊற்றே எம் இறைவா எம்மை வழிநடத்தி செல்லும் பொறுப்பிலுள்ள நாட்டுத் தலைவர்களுக்காக மன்றாடுகின்றோம் அவர்கள் தங்கள் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்ற அவர்களை ஆசீர்வதித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

எல்லாம் வல்ல இறைவா தவறி நடப்போர் திருந்தவும் நிம்மதியற்று வாழ்வோர் நிம்மதி பெறவும் வறுமையில் வாழ்வோர் வளம் பெறவும் உமது தூய ஆவியின் துணையினைத் தந்து அவர்களை வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

விண்ணரசின் வேந்தே ஒரு குடும்பமாக இங்கு குழுமியிருக்கும் எங்கள் அனைவர் மீதும் தூய ஆவியனவரின் வழிநடத்தும் வல்லமை செயல்பட்டு உமது இறைவல்லமையை நங்கள் உணர்ந்து வாழ்நாள் முழுதும் உமக்கு சன்றுபகர்கின்ற வாழ்க்கை வாழ வரமருள இறவைா உம்மை மன்றாடுகின்றோம்.

**31.05.2017 மரியாள் எலிசபெத்தை சந்தித்தல் திருவிழா திருப்பலி**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

**முன்னுரை**

"ஆண்டவருடைய தாய் என்னிடம் வர நான் வாய்ப்புப் பெற்றது எப்படி" (லூக் 1:43)

அன்புள்ள சகோதர சகோதரிகளே, இன்று நம் தாயாம் திருச்சபை தூய மரியன்னை தமது உறவினரான எலிசபெத்தை சந்திக்கும் நாளினை திருவிழாவாகக் கொண்டாடுகிறது. அருள்நிறைந்த மரியே வாழ்க எனும் வாழ்த்து கடவுளிடமிருந்தே வருகிறது. இது கபிரியேல் தூதர் மூலம் அன்னைக்கு இறைவன் கொடுத்த பட்டம். இறைவனை மட்டும் புகழப் படைக்கப்பட்ட வானதூதர்கள், மரியாவைப் புகழ்வது என்பது உலகத்தில் எந்த பெண்ணுக்கும், ஆணுக்கும் கிடைக்காத ஒன்று. இதோ, உம் வயிற்றில் கருத்தரித்து ஒரு மகனைப் பெறுவீர் (லூக் 1:31). "இதோ உம் உறவினரான எலிசபெத்தும் முதிர்ந்த வயதில் ஒரு மகனைக் கருத்தரித்திருக்கிறாள் மலடி எனப்படும் அவளுக்கு இது ஆறாம் மாதம் (லூக் 1:36) என்றார்.

இதைக் கேட்டதும் மரியாள் கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தூரிலிருந்து, மலைகளைக் கடந்து யூதேய நாட்டிலுள்ள எலிசபெத் ஊரான "அயின்கரீம்" சென்று மூன்று மாதங்கள் அவரோடு தங்கி அவருக்கும் பணி செய்தார். எலிசபெத் மரியாவின் நெருங்கிய உறவினர். இயேசு தான் கருவாயிருக்கும் போதே, கருவிலிருந்த அருளப்பரோடு சேர்ந்து இறைவனின் அரசைத் தயார் செய்தார். "மரியாள் எலிசபெத்தைப் பார்த்ததும் வயிற்றிலுள்ள குழந்தை அக்களிப்பால் துள்ளியது (லூக் 1:4). இங்கு வாழ்த்துச் சொன்னது மரியா, துள்ளியது எலிசபெத் வயிற்றிலிருந்த அருளப்பர். இது உணர்வு துள்ளல் அல்ல மகிழ்ச்சிதுள்ளல்.

உணர்வு ஐம்புலன்களால் நடைபெறுவது. மகிழ்வு என்பது அறிதல், புரிதல், தெளிதல் இவற்றால் நடைபெறுவது.

எலிசபெத் வயிற்றிலிருந்த அருளப்பர் மனிதக் குழந்தை மட்டுமல்ல, தெய்வீக ஞானம் பெற்ற குழந்தை தன் தாயை இறைவன் மகிமைப்படுத்திய விதத்தை எண்ணி இறைவனுக்கும், இறைவனின் தாயான மரியாவுக்கும் நன்றி சொல்லும் வகையில் வெளிப்படுத்தும் ஒரு விவிலியத் துள்ளல். இயேசுவைக் குறித்து முன்னறிவிப்பு செய்யும் பணியை, தன் தாயின் வயிற்றிலிருக்கும் பொழுதே அருளப்பர் ஆரம்பித்து விட்டார். தன்னை பாராட்டாத தன் அருமை அறியாத குழந்தைகளைப் பெற்ற எத்தனையோ தாய்மார்கள் இருக்க, வயிற்றிலிருக்கும் குழந்தை தம்மைப் பெருமைப்படுத்தும் அளவிற்கு மரியாவும் எலிசபெத்தும் பாக்கியம் பெற்றவர்களாக இருந்தனர். நமது தாய்மார்களும் பாக்கியம் பெற்ற தாய்மார்களாகப் பேறு பெறும் அளவுக்கு மரியாவோடு இணைந்து இறையரசில் பயணிப்போம் எனும் உறுதியுடன் இந்தத் திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, அருள் வாழ்வில் திருச்சபையை வழிநடத்தும் எங்கள் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், வேதியர், பொதுநிலையினர் அனைவரும் அருள் என்பது நம்மை வாழ்விக்கும் வளர்த்தெடுக்கும் இறைவனது குன்றாத குறையாத அன்புறவு அவரது நீங்காத நிலையான உடனிருப்பு. நாம் மனிதமயமாகி, இறைமயமாக நம்மை ஆற்றல்படுத்தும் அன்புறவாக இறைவன் தம்மையே நமக்குத் தருவதே அருள் எனும் தாரக மந்திரத்தைத் தரணியெங்கும் ஒலிக்கச் செய்ய தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

உறவின் ஊன்று கோலே எம் இறைவா, வருங்காலத் திருச்சபையின் தூண்களான இளைய சமுதாயம், அன்பைத் தேடுவோருக்கு அன்பையும், ஆதரவைத் தேடுவோருக்கு ஆதரவும், சூழ்நிலையால் மன அமைதி இல்லாதோருக்கு மன அமைதியும் வேலைத் தேடுவோருக்கு தகுந்த வேலையும் பிறரைப் புரிந்துக்கொள்வதை விடத் தன்னைப்புரிந்துக்கொண்டு வாழவும் வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

அனைத்து மக்களுக்கும் உம் தாயை சகாய மாதாவாகத் தந்த இறைவா, மக்களின் அவசர அவசியத் தேவைகளில் ஓடோடிச் சென்று உதவி செய்யும் மரியாவைப்போல வாழவும், வயதான எலிசபெத்தை சந்தித்து உதவியதைப் போலவும், கானாவூர் திருமணத்தில் திராட்சை ரசம் தீர்ந்து போனதை அறிந்து அதை நிறைவு செய்தது போலவும், இன்றும் எங்களுக்காக உம்மிடம் பரிந்து பேசி வரங்களை எங்களுக்கு வழங்கி நெருக்கடியிலிருந்தும் இக்கட்டு இடையூறுகளிலிருந்தும் எங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

### 1. தோமினிக் சாவியோ - புனிதத்தின் இளமுகம்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

வட இத்தாலியில், முரியால்டோ நகரில் 1842ம் ஆண்டு ஏப்ரல் 2ம் நாள் காலை 9மணிக்கு சார்லஸ் சாவியோ-பிரிஜித்தம்மாள் தம்பதியருக்கு இரண்டாவது மகனாய் பிறந்தார் சாவியோ. பிறந்த அன்றே மாலை 5 மணிக்கு திருமுழுக்கு அருட்சாதனத்தின் வழியாய் அளவில்லா அன்பைப் பொழிந்தனர் பெற்றோர். நான்கு வயதிலிருந்தே செபிக்கும் வழக்கம் கொண்டவர், பக்திமிக்கவர். காற்றோ, குளிரோ, மழையோ எதையும் பொருட்படுத்தாமல் அதிகாலை 5 மணிக்கே ஆலயம் செல்வதும், தவறாது பூசை உதவி செய்வதும் இயல்பாகவே இவருக்கிருந்த ஆசைகள். நற்கருணை அருட்சாதனத்தைப் பற்றிய மறையுண்மைகளையும் கற்றுத் தெளிந்திருந்த அவருக்கு 12 வயதில் நற்கருணை வழங்கவேண்டுமென்ற விதியைத் தளர்த்தி, 1849ஆம் ஆண்டில் அவரது 7வது வயதில் அவரது பங்குத்தந்தை முதல்

நற்கருணையை வழங்கினார். நற்கருணையை உண்ட அந்த நாளிலே, "நான் அடிக்கடி ஒப்புரவு சாதனத்தைப் பயன்படுத்தி, என் ஆன்ம குருவானவர் எனக்கு உத்தரவு கொடுக்கும்போதெல்லாம் நற்கருணை உட்கொள்வேன், கடன்திருநாட்களைச் சரியாக அனுசரிப்பேன், இயேசு கிறிஸ்துவும் அன்னை மரியாளும் எனது நண்பர்கள், இறந்தாலும் பாவம் செய்ய மாட்டேன்" என்று தீர்மானங்களை எழுதி வைத்தார்.

புனிதத் தன்மையிலும், படிப்பிலும் முன்னேற வேண்டுமென்ற ஆவலுடன் 1859ம் ஆண்டு அக்டோபர் 29ம் நாள் தோமினிக் தன் தந்தையுடன் புனிதத் தொன்போஸ்கோவைச் சந்தித்து அவரின் கல்வி நிலையத்திலும், விடுதியிலும் தான் சேர்ந்து படிக்க விரும்புவதாகக் கூறினார். சாவியோவின் கள்ளங்கபடமற்ற முகம், நல்ல குணமும், பக்தியும், அறிவுக் கூர்மையும் அவரைக் கூர்ந்தது. மெலிந்து காணப்பட்ட சாவியோவிடம், அவன் உடல்நிலைப்பற்றி எடுத்துக் கூறினார். அதற்கு சாவியோ அடிகளரே, நான் துணி, நீங்கள் தையல்காரர், இத்துணியைக் கொண்டு நல்லதொரு ஆடையைத் தைத்துக் கொடுங்கள் என்று பணிவோடு கூறினார். இதைக்கேட்ட போஸ்கோ, இடம் பிடித்த சாவியோ தொன்போஸ்கோவின் புனிதத்திலும், மடத்திலும் பள்ளியிலும் இவன் நாளைய புனிதனாவான் என்பதை உணர்ந்தார்.

மறையுரையில் ஒரு நாள், "நாம் புனிதர்களாக வேண்டும் என்று இறைவனின் விருப்பம், புனிதர்களாவது மிகவும் எளிதான செயல், புனிதர்களுக்கு விண்ணகத்தில் பெரியதோர் பரிசு தயாரிக்கப்படுகிறது" என்று சொன்னதைக் கேட்டு தொன்போஸ்கோவிடம் தானும் புனிதராக வேண்டும் என்ற உள்ளத்து ஆசையைத் தெரிவித்தான். ஒருநாள், தொன்போஸ்கோவிடம், சாவியோ, "தோமினிக் என்னும் பதத்தின் பொருள் என்ன?" என்று கேட்டார். "தோமினிக்" என்னும் பதம் "தோமினுஸ்" என்னும் இலத்தீன் வார்த்தையிலிருந்து வருகிறது. தோமினுஸ் என்றால் "ஆண்டவர்" என்று பொருள் ஆதலால் தோமினுஸ் என்பதற்கு "ஆண்டவருக்கு உரியவன் அல்லது சொந்தமானவன்" என்று பொருள் என விளக்கினார் தொன்போஸ்கோ, உடனே தோமினிக் சாவியோ என்னைப் புனிதனாக்கும்படி வேண்டுகிறேன். அதற்கு நான் அவசியம் ஆண்டவருக்கு சொந்தமாக வேண்டும், அவ்விதம் ஆகாதுபோனால், நான் பயனற்றவனாவேன் அல்லவா? என்றார். அவரின் ஆர்வத்தையும் நம்பிக்கையையும் கண்டாலும் சிறுவன் என்பதால் கடுந்தவங்களை மேற்கொள்ள அனுமதிக்கவில்லை, பதிலாக, சாவியோ அடிக்கடி தேவநற்கருணை பேழைக்கு முன்பாக முழந்தாள் படியிட்டு இயேசுவிடம், "இயேசுவே நீர் என்னைப் புனிதனாக்கும்" என்று சொல்லி ஆறுதல் அடைவார்.

சாவியோ தமது ஆண்டவர்களுடைய ஆன்மாக்களை ஆண்டவர் பாதம் கொண்டு சேர்க்க இனியமொழி, புன்னகை, அருள்நிறைந்த பார்வை, நல்ல நடத்தை என்ற வித்தியாசமான, வியப்புக்குரிய வழிகளைப் பின்பற்றினார் அந்த சிறிய அப்போஸ்த்தலர், அவர் ஆரட்டரியில் வாழ்ந்தபோது, மரியன்னையின் புண்ணியங்களைப் பின்பற்ற "அமலஉற்பவக்குழு" ஒன்றை மாணவர்களுக்கு ஏற்படுத்தி, அதற்குரிய ஒழுங்கு முறைகளுக்கு தொன்போஸ்கோவின் இசைவையும் பெற்றார். இக்குழு வழியாக மரியாயின் பக்தி, சலேசிய சபையில் இன்னும் வளர்ந்து கொண்டே வருகிறது.

அவரது இறுதி நாட்களில் அநேக பரவசக் காட்சிகள் இவருக்கு அருளப்பட்டன. ஒரு சமயம் தொடர்ந்து 6 மணி நேரம் நற்கருணைப் பேழைக்கு முன் பரவசத்தில் மூழ்கினார். சாவியோ அடிக்கடி உடல் நலமில்லாது இருந்தார். ஓய்வு எடுக்க அவரது வீட்டிற்கு இரண்டரை ஆண்டுகால விடுதி வாழ்க்கைக்குப் பிறகு அவரது வீட்டிற்கு அனுப்பப்பட்டார். 1857 மார்ச் மாதம் 9ம் தேதி மாலை அவரின் உடல்நிலை மோசமானது. அவர் மிகவும் வலிமைக் குன்றியவராய், இறக்கும் வேளையில் "ஆகா, என்ன இன்பமயமான அற்புத காட்சி" என்று விண்ணகக் காட்சி பற்றி பரவச வார்த்தைகள் கூறி உயிர்துறந்தார். அப்போது அவருக்கு வயது 15. இவரது கல்லறை இத்தாலியிலுள்ள தூரின் நகரிலுள்ள சகாய அன்னைப் பேராலயத்தில் உள்ளது. 1950 ம் ஆண்டு மார்ச் திங்கள் 5ம் நாள் முத்திபேறு பட்டம்

கொடுக்கப்பட்டது. 1954 ம் ஆண்டு ஜீன் 12ம் நாள், திருத்தந்தை 12ம் பத்திநார் இவருக்குப் புனிதப் பட்டம் கொடுத்தார்.

தோமினிக் சாவியோ என்னும் இந்த இளவல், இரத்தம் சிந்தா, பீடவணக்கம் பெற்ற புனிதர்களில் வயதில் இளையவர். இவ்விளமுகம், புனிதத்தன்மையில் உச்சியினை வந்தடைவதற்கு இறையருளுக்குப் பிறகு புனித தொன்போஸ்கோவே காரணம். அவர் திருமுழுக்கு அருட்சாதனத்தில் பெற்ற மாசின்மையை வானதூதருக்குரிய தூய்மையை தம் வாழ்நாளில் என்றும் இழந்தவர் அல்லர். கிறிஸ்தவ புண்ணியங்கள் பிற நற்பண்புகள் அனைத்தும் அவரிடம் சிறந்து மிளிர்ந்தன. அவர் அவைகளைத் தளராது கைக்கொண்டார். வீரத்தன்மையுடன் கடைப்பிடித்தார். தூய உள்ளம் பெற்றோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் இறைவனைக் காண்பர்” என்ற அன்பர் இயேசுவின் அமுதவாக்கு அவருடைய இதயத்தில் ஒன்றி அவரை வழிநடத்துவதாயிற்று. அவருடைய வாழ்க்கைப் பயன்பெற்றுப் பொலிந்தது, இறைவனின் பூங்காவில் இன்ப நறுமணம் கமழும் அழகிய லீலியாக மலர்ந்தது. அவர் புனித இளவல், புனித இளமுகம் என்ற பெயர் பொருந்தப்பெற்றார். இம்மண்ணுலகில் இளைஞர் அனைவருக்கும் தலை சிறந்த எடுத்துக்காட்டாக துலங்கிக் கொண்டிருக்கிறார். இதோ பாவம் செய்யாமலே மறைந்த இளமுகம் தோமினிக் சாவியோ வாழ்த்துவோம், வழிநடப்போம்.

## 2. தொன் போஸ்கோவின் வாழ்வில் கிறிஸ்தவர்களின் சகாய அன்னை

திருமதி. டிலைலா சேவியர்

புனித ஜான் போஸ்கோ சகாய அன்னையின்மீது மிகுந்த நம்பிக்கையும், ஆழ்ந்த விசுவாசமும் கொண்டவர். புனிதர் தனக்கு துன்பங்களும், நெருக்கடியும் வரும்பொழுதும், பிறருக்காக செபிக்கும் பொழுதும் இறைவனிடம் தனக்காக பரிந்து பேசும்படி சகாய அன்னையிடம் உருக்கமாக செபித்து அதனால் புதுமைகள் நடந்ததையும் வரலாறு சாட்சிகளோடு நிருபித்துள்ளது.

ஒருமுறை தன்னுடைய 12 வயது சிறுமியுடன் அந்த தாய் புனித ஜான் போஸ்கோவை காணவந்தார். மரியா ஸ்டார்டெரோ என்ற சிறுமி வியாதியின் காரணமாக தன் கண்பார்வையை இழந்திருந்தாள். சிறுமியின் தாய் புனிதரிடம் மருத்துவர்கள் கைவிட்ட நிலையை சொல்லி அழுதாள். ஜான் போஸ்கோ அச்சிறுமியிடம் அன்பொழுக உறையாட பின் அவளிடம் பார்வை பெற்றால் கண்களை நல்ல வகைகளுக்கு பயன்படுத்துவதோடு கடவுளை மனம் நோகச் செய்யக்கூடாது என்று அறிவுரைக் கூறி அங்கிருந்த அனைவரிடமும் அருள் நிறைந்த மரியே... செபமும், கிருபைதயாபத்து செபமும் சொல்லும்படி கேட்டுக்கொண்டு அந்நேரத்தில் அச்சிறுமிக்கு கண்கள் தெரிய ஆரம்பிக்கவே, ஜான் போஸ்கோ கொடுத்த மாதாவின் சுரூபத்தை பார்த்த உடனே முழுமையாக பார்வை பெற்று சுரூபத்திலுள்ள மாதாவின் வடிவமைப்பை அப்படியே கூறியதால் அனைவரும் விசுவசித்து சகாய அன்னையின்மீது பக்தியும் அன்பும் கொண்டனர்.

அந்நாட்களில் புனித ஜான் போஸ்கோவிற்கு எதிராக அரசியல் தலைவர்கள் செயல்பட்டு சலேசிய சபையை நிறுவுவதற்கு அனாதை பிள்ளைகளுக்கு இடவசதி செய்து கொடுப்பதற்கு தடையாக இருந்தனர். சில மதத்தலைவர்களும் புனிதருக்கு அருட்சாதனங்களை வழங்க அங்கீகாரம் வழங்காமல் இருந்தனர். ஆனால் ஜான்போஸ்கோவின் இடைவிடாத செபத்தின்மூலம், சகாய அன்னையின் நவநாள் செபத்தின் பலனாக இறைவன் இப்புனிதரைக் கொண்டு புதுமைகள் நடத்தினார். தடையாக இருந்த மோன்சயர் ஸ்வெஜ்லியாட்டி தன்னை சந்தித்து, தனக்காக சகாய அன்னையிடம் மன்றாடிய ஒரே இரவில் தான் குணமடைந்ததை வியந்து சகாய அன்னையின்மீது பக்தக் கொண்டதுமில்லாமல் தான் புனிதருக்கு விதித்திருந்த தடையையும் நீக்கினார்.

கர்தினால் ஆன்டோன்ல்லி கடுமையான வியாதியால் துடித்துக்கொண்டிருந்தார். ஆனால் எப்போது ஜான்போஸ்கோ அவரை சந்தித்து அவருக்காக சகாய அன்னையிடம் செபித்தாரோ அன்றே தனது

தீராத வியாதிலிருந்து குணமடைந்தார். அங்ஙனமே கர்தினால் பெரார்டி அவர்களின் உறவினரான பதினொரு வயது சிறுவன் டைபாய்டால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான். புனிதர் ஜான்போஸ்கோ சகாய அன்னையிடம் செபித்து சென்றுவிட்டபின் அச்சிறுவனும் குணம் பெற்றான்.

மிகவும் புகழ் பெற்ற மருத்துவம் ஜான்போஸ்கோவையும் அவருடைய குணமாக்கும் வல்லமையையும் குறைக்கூறி கேலி செய்து வந்தார். திடீரென்று பேசமுடியாமல் தினறினார். தந்தை அவரிடம் குணமாக்குவது நானல்ல, நான் அனைத்தையும் சகாய அன்னையின் பரிந்துரையால் செய்கிறேன் என்று கூறினார். மருத்துவரும் சரி அந்த சகாய அன்னை என்னையும் குணப்படுத்தட்டும் என்று கிண்டலாக கூறினார். நான் அந்த அன்னையை நம்புகிறேன் என்றும் கூறினார். மருத்துவர் மூளை பாதிப்பு நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். எனவே வெளியே செல்லவும் முடியாதவராயிருந்தார். ஜான் போஸ்கோ அவரிடம் சகாய அன்னை உங்களை குணப்படுத்த வேண்டுமா என்று கேட்டார். அதை மருத்துவர் விரும்பவில்லை புனிதர் தன்னோடு முழங்காலிருந்து அன்னையிடம் செபிக்கவும் நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து திவ்விய நற்கருணை உட்கொள்ளவும் கேட்டுக்கொண்டார். முதலில் மறுத்த மருத்துவர் தனக்கு மாதாவின்மீது நம்பிக்கையில்லை. செபத்திலும் நம்பிக்கையில்லை என கூறி ஜான்போஸ்கோவுடன் சேர்ந்து முழங்காலிலிருந்து செபித்தார். பின்பு அந்நிமிடமே ஆன்ம விடுதலையும் உடல் சுகமும் பெற்று, சகாய அன்னையின்மீது விசுவாசம் கொண்டார்.

பொதுவாகவே தந்தை ஜான் போஸ்கோ தன் ஏழை மாணவர்க்கு உணவு, உடை, இல்லம், பண உதவி, அமைதியான சூழல் தனக்கு சபை நடத்தவும், ஒப்புரவு அருட்சாதனம் இவைகளின் அங்கீகாரம் பெற சகாய அன்னையிடமே தானும் செபித்து, தன்னுடைய மாணவர்களிடமும் செபிக்க சொல்லி அவளின் பரிந்துரையால் அனைத்தையும் பெற்றுக்கொண்டார் என்றால் அது மிகையாகாது.

முடிவுரை

அன்னை மரியாள் அன்று கானாவூரில் மட்டுமல்ல, இன்றும் நமக்காக இறைவனிடம் பரிந்து பேசும் வரம்தரும் அன்னையாக திகழ்கின்றாள். எனவே சகாய அன்னையின் வழியாக இறைவனுடன் ஒன்றிப்போம்.

## 3. புனித மரிய தோமினிக்கா மசரெல்லோ திருவிழா

திரு. ஜான் அலெக்ஸ்

(தொன் போஸ்கோ நிறுவிய கிறிஸ்துவர்களின் சகாய அன்னையின் புதல்வியர் என்னும் சலேசிய அருட்கன்னியர் துறவற சபையின் தலைமை அன்னை)



இத்தாலியில் மார்நீஸ் என்னும் ஊரில் 1837 மே 9ம் நாள் பிறந்த மேரி டொமினிக்கா மசரெல்லோ, எப்போதும் மகிழ்ச்சியுடன் வாழும் பழக்கத்தையும் எல்லோரையும் மதித்துப் பழகும் பண்பையும் கொண்டிருந்தார். பங்கு தந்தை பெஸ்டாரினோ உருவாக்கி இருந்த அமல அன்னை சகோதரிகள் என்ற அமைப்பில் தமது 15 வயதில் உறுப்பினரானார். தொடர்ந்து பணியாற்றிய இவரை எங்கு சென்றாலும் சிறுவர்கள் மொய்த்துக் கொள்வார்கள். இவரின் அன்பில் நனைவார்கள். 23ம் வயதில் நகர் முழுவதும் டைப்பாய்டு காய்ச்சல் தொற்றுநோய் பரவியது. கிராமம் கிராமமாய் சென்று நோயுற்றோர்களுக்கு உதவி செய்தும் இறந்தவர்களை நல்லடக்கமும் செய்தார்கள். இதில் மசரெல்லோவிற்கும் டைப்பாய்டு காய்ச்சல் தொற்றியது. படுத்த படுக்கையான மசரெல்லோ, சாவின் வாயிலைத் தொட்டு நின்றார். நோயில் பூசுதலுக்கு பின் இறைவன் முன்குறித்திருந்த மசரெல்லோ, நலமுடன் எழுந்தார். ஆனாலும் முன்பிருந்த வேகம் குறைந்து நோயின் தாக்கம் அதிகமாக இருந்தது. எனவே வீட்டிலேயே ஓய்வெடுத்து வந்தார் மசரெல்லோ.

மசரெல்லோ, ஒரு நாள் தெருவில் நடந்து வருகையில் எதிரே மிகப்பெரிய கட்டிடம் இருப்பது போலவும் அதன் முற்றத்தில் பெண் குழந்தைகள் விளையாடுவது போலவும் கண்டார். அப்போது "இவர்களை உன்னிடத்தில் ஒப்படைக்கிறேன்" என்ற குரலொலிளைக் கேட்டார். இதே போன்ற அனுபவத்தை புனித தொன் போஸ்கோவும் பெற்றார். முற்றத்தில் கைவிடப்பட்ட பெண் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருப்பதையும், "இவர்கள் எனது குழந்தைகள். இவர்களைக் கவனித்துக்கொள்" என்ற குரலொலியையும் கேட்டார். தூய ஆவி இருவரின் மனதிலும் செயலாற்றினார்.

அருட்தந்தை பெஸ்டாரினோ, அமல அன்னை சகோதரிகள் அமைப்பில் இருந்த 15 இளம் பெண்களையும் ஆன்மீகத்தில் வளர்த்தெடுத்தார். இவர்களைத் தனி இல்லத்தில் ஒரு குழுமமாக வாழ வைத்தார். இந்த சகோதரிகள் விரைவில் சில சிறுமிகளைத் தங்கள் இல்லத்தில் சேர்த்தார்கள். அவர்களுக்கு கிறிஸ்தவ விசுவாசம் மற்றும் தையல் தொழில் கற்றுக்கொடுத்தார்கள். நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும் என்று விரும்பிய மசரெல்லோ மீதம் உள்ள பொருட்களை தம் வாடிக்கையாளர்களுக்குத் திருப்பிக் கொடுத்தார். மற்றவர்களிடம் உணவுக்காக கை ஏந்தி நின்றார்கள். தாங்கள் சாப்பிடாமல் தங்களிடம் உள்ள சிறுமிகளுக்குக் கொடுத்துவிட்டு பல நாட்கள் பட்டினி கிடந்தார்கள்.

ஏற்கனவே குருக்கள் மற்றும் சகோதரர்களுடன் சலேசிய சபையினர் மாணவர்களை வழிநடத்தி வந்தார்கள். இளம் பெண்களுக்கும் அதே போன்ற அமைப்பு வேண்டும் என்று நினைத்த தொன்போஸ்கோ இந்த சகோதரிகளது அமைப்புக் குறித்து கேள்விப்பட்டார். அவர்களது அர்ப்பணிப்பு உண்மையானது என்றால் அந்த அமைப்பை சலேசிய சகோதரிகள் சபையா உருவாக்கலாம் என்று முடிவெடுத்து அவர்களைச் சந்திக்க சென்றார். ஆனால் தங்கள் அமைப்பிற்கு உதவி கேட்க வந்திருப்பதுபோல ஒரு சிறுவனுடன் சென்றார்.

சந்தித்தார். அவர்களது பணி குறித்தும் வாழ்வின் தேடல் குறித்தும் விசாரித்தார். அவர்கள் மீது நம்பிக்கை கொண்டார். அமல அன்னையின் சகோதரிகள் அமைப்பில் இருந்த 15 பேரையும் வைத்து, "கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் புதல்வியர்கள் சபை" யை 1872 ஜுலை 31ம் நாள் உருவாக்கினார். பொதுத் தேர்தல் நடத்தும்வரை தற்காலிகத் தலைவராக இருக்கும்படி மசரெல்லோவை தொன் போஸ்கோ கேட்டுக்கொண்டார். போதிய கல்வியறிவு இல்லை எனக் கூறி மறுத்த மசரெல்லோ, பின்னர் கீழ்ப்படிதலுடன் சம்மதித்தார். இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நடைபெற்ற தேர்தலில் மசரெல்லோ முதல் தலைவியாகத் தேர்வானார்.

இளம் பெண்களைப் பராமரித்தல், கற்பித்தல், மீட்பின் பாதையிலும் தனிமனித ஆளுமை வளர்ச்சியிலும் வழிநடத்துதல் ஆகியவற்றைத் தம் பணியின் இலக்காகக் கொண்டு செயல்பட்டனர். எல்லோருடனும் அமர்ந்து எப்படி வாசிப்பது, எப்படி எழுதுவது என்பதை முறைப்படி கற்றார். மசரெல்லோ தாழ்ச்சியுடன் அவர்களோடு சேர்ந்து தானும் கற்றார். அறிவுத் தேடலுடன் நிற்காது பணிகளை விரிவுப்படுத்தினார். தென் அமெரிக்காவிற்கு சகோதரிகளை அனுப்பினார். அவர்களை ஊக்கப்படுத்த அவர்கள் பணியாற்றி இடங்களைச் சென்று பார்வையிட்டார். அந்த பயணங்களில் கப்பல் சிதைவில் சிக்கினார். நோயுற்றார்.

மரணப் படுக்கையில் இருந்த மசரெல்லோ, தம் சகோதரிகளிடம், "என் இறப்பிற்குப் பிறகு நீங்கள் பேராசைப்படுவீர்களோ என்றும் அடுத்த தலைவி மீது பொறாமைப்படுவீர்களோ என்றும் நான் அஞ்சுகிறேன். அன்னை மரியாவே நமது சபையின் தலைவி என்பதை நினைவில் கொள்ளுங்கள். வழிநடத்தும் சுமையான பணியை ஏற்பவருக்கு எப்போதும் கீழ்ப்படிந்து நடங்கள். இரண்டாவதாக ஒருவர் மற்றவருக்கு உதவிகள் செய்யுங்கள். ஆனால் உங்களுக்காக நியமிக்கப்படும் ஆன்ம குருவிடம் உங்கள் கை எப்போதும் இருக்கட்டும்" என்று கூறினார்.

இறைவனுக்கு முழு அர்ப்பணத்துடனும் அடுத்தவர்களுக்கு முழு அன்புடனும் உழைத்த மசரெல்லோ, இறைவன் தன்னை அழைத்தபோது 1881 மே 14ம் நாள் இறந்தார். திருத்தந்தை 11ம் பத்திநாதர் 1938 நவம்பர் 20ம் நாள் அருளாராக உயர்த்தினார். திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1951 ஜுன் 24ம் நாள் அன்று புனிதராக உயர்த்தினார்.

## 4. திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாண்டு புனித வியாழன் ஆண்டவரின் இறுதி இராவுணவு திருப்பலியை இத்தாலியின் பாலியானோ (Paliano) சிறையில் நிறைவேற்றி கைதிகளின் காலடிகளைக் கழுவினார். இந்தியாவில் 22 ஆண்டுகளுக்கு முன்னர் கொல்லப்பட்ட அருள்சகோதரி இறையடியார் ராணி மேரி வட்டாலில் அவர்களை அருளாளராக உயர்த்துவதற்கு அவருடைய வீரத்துவமான வாழ்வு குறித்த விவரங்களை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார். பிரான்சிஸ்கன் கிளாரிஸ்ட் அருள்சகோதரிகள் சபையைச் சேர்ந்த அருள்சகோதரி இறையடியார் ராணி மேரி அவர்கள் 1995ம் ஆண்டு பிப்ரவரி 25ம் தேதி பேருந்தில் இன்டோர் நகருக்குப் பயணம் செய்துக் கொண்டிருந்தபோது 41 வயது மதிக்கத்தக்க சமந்தர் சிங் என்பவரால் குறைந்தது ஐம்பது முறைகள் கத்தியால் குத்தப்பட்டு இறந்தார்.

உலகளவில் கத்தோலிக்கரின் எண்ணிக்கை சற்று அதிகரித்திருப்பதாகவும் உலகிலுள்ள கத்தோலிக்கரில் ஏறக்குறைய 56 விழுக்காட்டினர் பத்து நாடுகளில் உள்ளனர் எனவும் திருப்பீடம் வெளியிட்ட அறிக்கை கூறுகின்றது. 2017ம் ஆண்டின் "Annuario Pontificio" அதாவது 2017ம் ஆண்டின் வத்திக்கானின் புள்ளிவிபர ஆண்டு குறிப்பேட்டை வெளியிட்டுள்ள திருப்பீடம் ஆப்ரிக்காவில் கத்தோலிக்கரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்றும் பிரேசில் மெக்சிகோ பிலிப்பின்ஸ் அமெரிக்க ஐக்கிய நாடு இத்தாலி, பிரான்ஸ், கொலம்பியா, ஸ்பெயின், காங்கோ, அர்ஜென்டினா ஆகிய பத்து நாடுகளில் பாதிக்கும் மேற்பட்ட கத்தோலிக்கர் உள்ளனர் என்றும் கூறியுள்ளது.

இந்திய கத்தோலிக்கத் திருஅவை நூறு விழுக்காடு தலித் கிறிஸ்தவர்களுக்கு உடன் நிற்பதாக மும்பையில் இடம்பெற்ற தேசிய தலித் கிறிஸ்தவ அவைக் கூட்டத்தில் உரையாற்றினார் கர்தினால் ஆஸ்வால்டு கிரேசியஸ். பல்வேறு கிறிஸ்தவ சபைகளைச் சேர்ந்த 45 தலைவர்களின் முன்னிலையில் உரையாற்றிய மும்பை கர்தினால் கிரேசியஸ் அவர்கள் இந்தியக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 90 இலட்சமாக இருக்கும் நிலையில் தலித் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே இருபது இலட்சம் என்பதை நினைவில் கொண்டு அவர்களின் மத உரிமைகள் மதிக்கப்படுவதுடன் அவர்களின் தாழ்த்தப்பட்ட சமூகத்திற்குரிய அங்கீகாரமும் வழங்கப்பட வேண்டும் என்றார்.

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

புனித சார்லஸ் லுவாங்க
தூய ஆவி பெருவிழா
தூய ஆவியின் கொடைகளுக்காக நவநாள் - செப வழிபாடு
புனித போனிபாஸ்
புனித நார்பெர்ட்
அருளாளர் மரிய தெரேசா சிராமெல்
மூவொரு கடவுள் பெருவிழா
பதுவை நகர் புனித அந்தோணியார்
கிறிஸ்துவின் திருவுடல் திரு இரத்தம் பெருவிழா
புனித அலோசியஸ் கொன்சாகா

இயேசுவின் திரு இருதயம்
திருமுழுக்கு யோவானின் பிறப்பு
ஆண்டின் பொதுக்காலம் 12ம் ஞாயிறு
அலெக்சாந்திரியா நகர் புனித சிரில்
புனிதர்கள் பேதுரு, பவுல்
பள்ளி துவக்க நாள் - பள்ளியில் செபவழிபாடு

**பகுதி 2: விசுவாசத்தில் வளர...**

தூய ஆவியாரும் இன்றைய கிறிஸ்தவ வாழ்வும்
இயேசுவின் திரு இருதயம் - வெளிப்பாட்டின் வரலாறு
அந்தோணியார் - புகழும் புதுமைகளும்
திருச்சபை செய்திகள்

**சுடர் வாசகர் போட்டி 34 சரியான விடைகள்**

1. புனித லூயிஸ் தே மான் போர்ட்
2. புனித சியென்னா கத்ரீன்
3. தம் மகனை நமக்காக மரிக்கச் செய்த அன்பு (உரோ 5:8)
4. திருச்சபைக்கும் கிறிஸ்தவர் ஒவ்வொருவருக்கும்
5. அமைதியில் அன்பின் சிகரத்தை அடைய முடியும்
6. புனித லூயிஸ் தே மான் போர்ட்
7. இலாசரின் இறப்பு நிலையறிந்து கண்ணீர்விட்டு அழுதது
8. குருத்துவம், நற்கருணை, அன்பு கட்டளை
9. புனித மாற்கு நற்செய்தியாளர் இல்லம்
10. சக்கேயு வீட்டில் நடந்த நிகழ்வு (லூக் 19:10)
11. புனித பவுல், பர்னபா
12. தோமா-விசுவாசம், பேதுரு-மன்னிப்பு
13. இலாசர், நயீம் விதவை மகன், யாயீர் மகள்
14. இறந்த கிறிஸ்து உயிர்த்தார் என்ற சாட்சியத்தில்
15. 55அடி உயரம்

**பரிசு பெற்றவர்கள்**

அ. பிரான்சிஸ் அலோசியஸ், கே.கே. நகர், சென்னை

அந்தோணி சாமி, சூரமங்களம்

**சுடர் வாசகர் போட்டி 35**

1. **தூய சூசையப்பரின் திருவிழாவை தொடங்கிவைத்த திருத்தந்தை யார்?**
2. தூய பிலிப்பு எப்படி இறந்ததாக ஆசிரியர் கூறுகிறார்?
3. தூய பவுலை இருகரம் விரித்து வரவேற்றவர் யார்?
4. தூய தோமினிக் சாவியோ எப்பொழு இறந்தார்?
5. பாஸ்கா காலத்தின் 4ம் ஞாயிறை எப்படி அழைக்கிறோம்?
6. "இவர்களை உங்களிடம் ஒப்படைக்கிறேன்" இந்த வார்த்தைகளை இறைவன் யாரிடம் கூறினார்?
7. கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் புதல்வியர் சபை உருவான நாள் எது?
8. தூய மசரெல்லோ இறக்கும்போது தனது சபையின் தலைவி யார் என்று கூறினார்?
9. தூய மசரெல்லோ புனிதராக உயர்த்தப்பட்டது எப்போது?

10. சகாய அன்னை பக்தியில் தோல்வியைத் தழுவிய அரசர் யார்?
11. செக்கரியா, எலிசபெத் வாழ்ந்த ஊரின் பெயர் என்ன?
12. சிறுமி கண்பார்வை பெற தொன் போஸ்கோ செபித்த செபம் என்ன?
13. இந்த ஆண்டு பெரிய வியாழனன்று திருத்தந்தை பிரான்சிஸ் யாருடைய பாதங்களை கழுவினார்?
14. பாதிபேருக்குமேல் கிறிஸ்தவர்கள் உள்ள நாடு என்று வத்திக்கான் எந்தெந்த நாடுகளை கூறுகிறது?
15. அருட்சகோதரி இராணி மேரி யாரால் எப்படி இறந்தார்?

| தேதி | கிழமை | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | தி | தொழிலாளரான புனித சூசையப்பர் | தொநூ. 1:26-2:3 | மத் 13: 54-58 |
| 2 | செ | புனித அத்தனாசியார் | திப. 7:51-8:1அ | யோவா 6:30-25 |
| 3 | பு | புனித பிலிப்பு, யாக்கோபு திருத்தூதர் | 1கொரி 15:1-8 | யோவா14:6-14 |
| 4 | வி | | தி.ப. 8:26-40 | யோவா 6:44-51 |
| 5 | வெ | | தி.ப. 9: 1-20 | யோவா6:52-59 |
| 6 | ச | | தி.ப. 9:13-42 | யோவா 6: 60-69 |
| 7 | ஞா | பாஸ்கா கால 4ம் ஞாயிறு | I.1தி.ப. 2:14அ.36-41<br>II. 1பேதுரு 2:20ஆ-25 | யோவா 10:1-10 |
| 8 | தி | | தி.ப. 11:1-18 | யோவா 10:11-18 |
| 9 | செ | | தி.ப. 11:9-26 | யோவா10: 22-30 |
| 10 | பு | | தி.ப. 12: 24-13:5 | யோவா 12:44-50 |
| 11 | வி | | தி.ப. 13:13-25 | யோவா 13:16-20 |
| 12 | வெ | புனிதர்கள் நரேயுஸ், அக்கிலேயுஸ், புனித பங்கிராஸ் | தி.ப. 12: 26-33 | யோவா 14:1-6 |
| 13 | ச | புனித பாத்திமா அன்னை நினைவு | தி.ப. 13: 44-52 | யோவா 14: 7-14 |
| 14 | ஞா | பாஸ்கா கால 5ம் ஞாயிறு | 1தி.ப. 6: 1-7<br>1பேதுரு 2: 4-9 | யோவா14: 1-12 |
| 15 | தி | | தி.ப. 14:5-18 | யோவா 12:21-26 |
| 16 | செ | | தி.ப. 145: 10-11.12-13.21 | யோவா 14:27-31 |
| 17 | பு | | தி.ப. 15:1-6 | யோவா 15:1-8 |
| 18 | வி | புனித முதலாம் யோவான், திருத்தந்தை | தி.ப. 15:7-21 | யோவா 15:9-11 |
| 19 | வெ | | தி.ப. 15:22-31 | யோவா 15:12-17 |
| 20 | ச | புனித சியென்னா பெர்னார்டின் | தி.ப. 16: 1-10 | யோவா 15:18-21 |
| 21 | ஞா | பாஸ்கா காலம் 6ம் ஞாயிறு | 1தி.ப. 8:5-8.14-17<br>1பேதுரு 3: 15-18 | யோவா 14:15-21 |
| 22 | தி | புனித ரீத்தா காசியா | தி.ப. 16: 11-15 | யோவா 15: 26-16:4 |
| 23 | செ | | தி.ப. 16: 22-34 | யோவா 15: 26-16:4 |
| 24 | பு | | தி.ப. 17:15,22-18:1 | யோவா 16:5-11 |
| 25 | வி | புனித மகதலா மரியா | தி.ப. 18: 1-8 | யோவா 16:16-20 |
| 26 | வெ | புனித பிலிப்பு நேரி | தி.ப. 18: 9-18 | யோவா16:20-23அ |
| 27 | ச | புனித காண்டர்பரி அகுஸ்தீன் | தி.ப. 18: 23-28 | யோவா 16:23ஆ-28 |
| 28 | ஞா | ஆண்டவரின் விண்ணேற்றம் பெருவிழா | 1தி.ப. 1: 1-11<br>எபேசி 1: 17-23 | மத். 28:16-20 |
| 29 | தி | | தி.ப. 19: 1-8 | யோவா 16:29-33 |
| 30 | செ | | தி.ப. 20: 17-27 | யோவா 17:1-11அ |
| 31 | பு | புனித மரியன்னை எலிசபெத்தை சந்தித்தல் | செப் 3: 14-18அ | லூக் 1: 39-56 |